Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 179

National Tamil Daily தேசிய தினசரி

(10-8-65)

விசுவாவசு ஆடி 6 ரபி ஆகிர் பிறை 12 செவ்வாய்க்கிழமை

## மனித சஞ்சாரமற்ற பகுதியில் கள்ளக்கடத்தல்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

கரையூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சார்ஜன்ட் பி. எஸ். சிவஞானத்திற்கு பாலைத்தீவில் கள்ளக்கடத்தல் பொருள்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன என்பது பற்றிக் கிடைத்த தகவலின் பேரில் திரு சிவஞானம் கரைநகர் கடற்படை முகாமிற்குச் சென்று கடற்படை அதிகாரியின் அனுமதியுடன் "டியாக்சாவா" என்ற வேஞ்சில் லெப்டினன்ட் ரணசூரிய தலைமையில் ஒரு கோஷ்டி பாலைத்தீவுக்கு புறப்பட்டது.

கடல் அன்று மிகவும் கொந்தளிப்புடனும் பிரயாணத்திற்கு இடையூறாகவும் காணப்பட்ட பொழுதிலும் இக்கோஷ்டியினர் எடுத்த முயற்சியை கைவிடவில்லை. கருமமே கண்ணாயிருந்த லெப்டினன்ட் ரணசூரியா கோஷ்டியினர் இறுதியில் பாலைதீவை அடைந்து அங்கேயுள்ள காடுகளில் குறிப்பிட்ட பொருட்களைத் தேடிய பொழுது அங்கே சாதிக்காய்ப் பூவும் சாதிக்காயும் ஆகியவை கொண்ட 37 மூடைகளை கண்டெடுத்தனர். இப்பொருட்கள் யாவும் 30,000 ரூபா மதிப்பீடு

(6-ம் பக்கம் பார்க்க)

# புதிய வரவு - செலவு திட்டப் பிரசங்கம்

## அயல்நாட்டுத் தூதுவர் வர்த்தகர் அக்கறை

கொழும்பு, திங்கள்

**தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு—செலவுத் திட்டத்தை நிதிமந்திரி திரு. யு. பி வன்னிநாயக்கா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்து தமது முதலாவது வரவு—செலவுத்திட்டப் பிரசங்கத்தை நிகழ்த்தினர்.**

ஜனப்பிரதிநிதிகள் சபை, சபாநாயகர் சேர் அல்பர்ட் எப்பீரிஸ் தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடியது.

சரியாக இரண்டு மணிக்கு நிதிமந்திரி திரு வன்னிநாயக்கா தமது வரவு—செலவுத்திட்டப் பிரசங்கம் அடங்கிய கைப்பெட்டியுடன் தமது காரில் வந்திறங்கினர்.

சபையில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களும் அநேகமாக எல்லோரும் சமுகமளித்திருந்தனர்.

பார்வையாளர் கலரியில் வர்த்தகர்களும் பிரமுகர்களும் கலரியில் வெளிநாட்டு ஸ்தானிகளில் ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களும் அமர்ந்திருந்தனர்.

நிதிமந்திரி திரு வன்னிநாயக்கா தமது பிரசங்கத்தில் நாட்டின் சமீபகால நிதிநிலைமை பற்றியும் முன்னைய வரவு — செலவுத்திட்டங்கள் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டார்.

## ஜோன்ஸனின் உருவத்தை எரித்தனர்

### பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கராச்சி, ஆக. 9

பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோன்ஸனின் உருவமொன்றை தீயிட்டுக் கொளுத்தினர்.

கராச்சியில் தியேட்டரொன்றில் திரையிடப்பட்டிருந்த திரைப்படத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் பலவந்தமாக நிறுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகம் முன்னும் அவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

கிரீஸில்

## புதிய மந்திரிசபை அமைக்கப்படுமா?

ஏதன்ஸ், ஆக, 9

கிரீஸில் புதிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு பாபந்திரியோவின் அரசாங்கத்தில் உதவிப் பிரதமராகவிருந்த ஸ்ரபனோ பவுலஸை கிரீஸ் மன்னர் கொன்ஸ்டன்டைன் கேட்டுள்ளார்.

புதிய மந்திரி சபையில் முன்னாள் பிரதமர் பாப்பந்திரியோஸ் உதவிப் பிரதமராக விருக்கலாம் என அறியப்படுகிறது.

திரு பவுலஸ் நேற்று கிரீஸ் மன்னருடன் சுமார் 45 நிமிட நேரம்வரை பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்தே அவரை புதிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு மன்னர் கேட்டுள்ளார்.

தாம் விரைவில் புதிய அரசாங்கமொன்றை அமைப்பதாக திரு பவுலஸ் நம்பிக்கை தெரிவித்திருந்தபோதிலும் மந்திரி சபையை நிறுவுவதில் சில நெருக்கடிகள் தோன்றலாமென்றும் சில அவதானிகள் கருத்துவெளியிட்டுளனர்

### ஆர்ப்பாட்டம்

இதற்கிடையில் திரு பவுலஸை புதிய அரசாங்கம் அமைக்குமாறு மன்னர் கோரியதை ஆட்சேபித்து நேற்று ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

திரு பீட்டர் கெனடியும் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர்

## சிங்கப்பூர் விலகியது

### மலேசியா கூட்டரசிலிருந்து இந்தோனேஷியா எதிர்ப்பு காரணம்

சிங்கப்பூர், ஆக. 9

**மலேசியா கூட்டரசிலிருந்து சிங்கப்பூர் பிரிந்துவிட்டதாக இன்று சிங்கப்பூர் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.**

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் விலகிக்கொண்டதற்கு; கருத்து வேறுபாடும் மலேசியாவை இந்தோனேஷியா எதிர்ப்பதுமே காரணங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிலிருந்து தமது நாடு விலகிச் சென்றதனால் சிங்கப்பூர் முழு சுதந்திரநாடாகி விடுமென்று சிங்கப்பூர் பிரதமர் திரு லீ-குவான்-யூ அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஷ்மானும் சிங்கப்பூர் பிரதமர் லீயும் இன்று விடுத்த கூட்டறிக்கையொன்றில்; பாதுகாப்பும் பரஸ்பர உதவிகளும் தொடர்ந்திருந்து வருமெனறும் இரண்டில் ஒரு நாட்டை மூன்றாவது நாடு தாக்குமானால் மற்றநாடு உதவிக்குச் செல்லுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையின் படி; சிங்கப்பூரிலுள்ள தளங்களை உபயோகிக்க மலேசியாவுக்கு உரிமை இருக்கும் பாதுகாப்பு, வர்த்தகம, வாணிபம் ஆகிய துறைகளில் இரு நாடும் நெருங்கி ஒத்துழைக்குமென்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2 வருடத்துக்கு முன் உதயமானது

சிங்கப்பூர், மலேசியா, சரவாக் சாபா ஆகிய நான்கு நாடுகளைக் கொண்ட மலேசியா கூட்டரசு இரு வருடங்களுக்கு முன்னர் உதயமானது.

கடந்த சிலதினங்களாக சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்குமிடையே கருத்துவேறுபாடுகள் நிலவிவந்தன. மலேசியா கூட்டரசிலிருந்து சிங்கப்பூர் பிரிவதற்கு இந்தோனேஷியாவின் மலேசியா எதிர்ப்புக் கொள்கையே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

## ஜி. ஜி. மறுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

'தமிழர் பிரச்னையை ஐ. நா.வில் கூறுவேன்' என்ற தலைப்பில் நேற்றைய 'ஈழநாடு' (9-8-65) பத்திரிகையில் வெளிவந்த செய்தி பற்றி யாழ்ப்பாணம் எம். பி. யும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மறுப்புத் தெரிவித்திருக்கிறார். ஐ. நா. சபையில் தமிழர் பிரச்னை பற்றி தாம் எடுத்துக் கூறப்போவதாக தாம் குறிப்பிடவேயில்லையென்று திரு பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்,

## எண்ணெய்க் குழாய் மீது குண்டுவீச்சு

லண்டன், ஆக. 9

ஏடன் துறைமுகத்துக்குச் செல்லும் எண்ணெய்க் குழாய்களை (பைபுலைன்) தகர்த்தெறிய சிலர் மேற்கொண்ட சதித்திட்டம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய்க்குழாய்கள் மீது ஒரு குண்டு வீசப்பட்டதென்று அறிவிக்கப்பட்டது.

## ஹர்த்தால் தினம்

நல்லூர், செவ்வாய்

ஹர்த்தால் தினத்தை யொட்டி யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நாளை மாலை பொதுக்கூட்டமொன்று நடத்தப்படவிருக்கின்றது. அகலவத்தை எம் பி திரு அனில் முனசிங்காவும், கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தவர்

'ஈழநாடு'

○

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா வண்ண மலர்

★

நாளை (11-8-65) வெளிவருகின்றது

- நல்லூர்க் கந்தனின் திருஉலாக் காட்சிப் படங்கள்
- அறிஞர்களின் கட்டுரைகள்
- கவிஞர்களின் கவிதைகள்
- நல்லூர்க் கந்தன் ஆலய வரலாறு
- உற்சவ நிகழ்ச்சிகள்

14 பக்கங்களுடன் வழமையான விலையில் வெளிவருகின்றது

உங்கள் பிரதிக்கு இன்றே ஒழுங்கு செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உழைப்பவனிடமே கடவுள் இருக்கிறார். உழைப்பால்தான் உயர்நிலையை அடையலாம்.

— எடிஸன்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49. Jaffna. Grams: "EELANADU" Jaffana Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 26 — 10 8 [illegible]


## பாலும் உணவும்

கால்நடை வளர்ப்பில் உடனடி அபிவிருத்தியை மேற்கொள்ளும்பொருட்டுத் தனியார்துறை க்ஷரிதமாக உதவி செய்யமுடியுமென்றும் இதற்காகத் தனியார்துறைக்கு இரண்டுகோடி ரூபாய்வரை வெளிநாட்டுச்செலாவணியை ஒதுக்குமாறும் உணவு விவசாய அமைச்சர் அரசாங்கத்துக்குச் சிபார்சுசெய்துள்ளார். பால் உணவில் நாடு தன்னிறைவுபெறவேண்டுமென இதுவரை பலர் யோசனை தெரிவித்திருந்தபோதிலும் தேசிய அரசாங்கம் செயலில் இதற்கான முயற்சி மேற்கொள்ளவந்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்தியா சுதந்திரம் பெற்றதும் பாலுணவில் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் பால்பண்ணைகளையும், கால்நடைப்பண்ணைகளையும் அமைத்து பால் உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டன. இதேசமயம் வெளிநாடுகளிலிருந்து பால் உணவுகளை இறக்குமதிசெய்வதைத் தடைசெய்தது. 'ஹோர்லிக்ஸ்'போன்ற மருந்துவகைப் பாலுணவுகளையும் இந்திய அரசாங்கம் தடைசெய்தது. இது 1947-ம் ஆண்டில் நடைபெற்ற விஷயம். இலங்கை சுதந்திரமடைந்து பதினேழு வருடங்களாகிவிட்டன. இப்பொழுதாவது பால் உணவுபற்றியும் கால்நடை வளர்ப்புபற்றியும் உணவுவிவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா அக்கறைசெலுத்தி நடைமுறையில் சாரியமாற்ற முயற்சிசெய்வது வரவேற்கத்தக்கது. அமைச்சரின் திட்டப்படி கால்நடை வளர்ப்பில் உடனடி அபிவிருத்திக்கென தனியார்துறைக்கு இரண்டு கோடி ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கப்படும். தம்பன்கடுவையில் எருமைப் பண்ணையொன்றை ஆரம்பிக்க தனியார்துறையைச் சேர்ந்த மூவர் முன்வந்துள்ளனரென்றும் இங்கு உற்பத்தியாகும் பால் புட்டிப்பாலாக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் இப்பொழுது ஒருவருக்கு இரண்டு அவுன்ஸ்பால்தான் கிடைக்கிறது. இதரநாடுகளில் ஒருவர் சராசரி 20 அவுன்ஸ் பால் உபயோகிக்கிறார். இதுதவிர இப்பொழுது வெளிநாடுகளில் இருந்து பால்உணவுகள் இறக்குமதி செய்வதற்காக ஒன்பது கோடி முப்பதுலட்சம் ரூபாய் இங்கிருந்து அனுப்பப்படுகிறது. இதில் ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாய் கட்டிப்பால் இறக்குமதிக்குச்செலவிடப்படுகிறது. இங்கு கால்நடை வளர்ப்புக்கு ஊக்கமளித்து அதை அபிவிருத்திசெய்தால் இங்கு பால் உணவு தாராளமாகக் கிடைக்க வழிபிறப்பதுடன் பாலுணவுக்காக வெளிநாடுகளுக்குச்செல்லும் கோடிக்கணக்கான ரூபாயும் மிச்சப்படும்.

இறைச்சிக்கான கோழி, ஆட்டுப்பண்ணைகளை ஏற்படுத்த உதவியும் ஊக்கமும் அளிப்பதும் உணவு விவசாய அமைச்சரின் திட்டமாகும். அமைச்சரின் இந்த நல்ல யோசனைகளை தேசிய அரசாங்கம் உடனடியாகப் பரிசீலனை செய்து அதை விரைவில் செயலில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமென எதிர்பார்ப்போம்.

# மீன்பிடியாளர்களை பாதிக்கும் நடவடிக்கை

## மீன்பிடியாளர் சங்கங்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், செவ். கடற்தொழிலாளர்கள் பிடிக்கும் மீன்களை தனிப்பட்டவர்களுக்கோ அன்றி வியாபாரிகளுக்கோ விற்பனவு செய்வதைப் பாதிக்கக்கூடியவிதத்தில் அரசாங்கமோ அன்றி மீன்பிடி கார்ப்பரேஷனோ நடவடிக்கை எடுக்கக்கூடாதென்ற தீர்மானம் நேற்றுக்காலை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மீன்பிடி சங்கங்களின் சமாஜ மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு எஸ் ஸைனிஸ்லஸ் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் ஆனைக்கோட்டை, மாதகல், நாவாந்துறை, கரையூர், பாஷையூர், தாழையடி, மயிலிட்டி, தீவுப்பகுதி ஆகிய பல்வேறு இடங்களைச்சேர்ந்த மீனவர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை மீன்பிடி கார்ப்பரேஷனால் கடற்தொழிலாளர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் குறித்து இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. எஸ் ஸைனிஸ்லஸ் பேசுகையில் மீன்பிடி விற்பனவு கார்ப்பரேஷன் வரவேற்கக்கூடிய தொன்று இருந்தாலும் அதனுடைய திட்டம் மிகவும் மோசமானதாக இருக்கிறதென்றும் கார்ப்பரேஷன் பலாத்காரமாக கடற்தொழிலாளர்களிடம் மீன் வாங்கும் முறையைக் கையாளக்கூடாதென்றும் சொன்னார்.

ஓய்வுபெற்ற மீன்பிடி பரிசோதகர் திரு பரமானந்தராசா பேசுகையில் 'மீன்பிடிக் கார்ப்பரேஷன் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐவருக்கும் அதன் தலைவரான சாம் டி சில்வாவுக்கும் எந்தவிதமான கடற்தொழில் அனுபவமும் கிடையாது. அப்படிப்பட்டவர்கள் இக்கார்ப்பரேஷனுக்கான திட்டங்களை வகுத்துள்ளார்கள். கடற்தொழிலில் அனுபவமுள்ள தொழிலாளர்களிடம் எந்தவிதமான ஆலோசனையும் கேட்காது செய்துமுடிக்க முடியாத திட்டங்களை தயாரித்துள்ளார்கள். இத்திட்டம் முதலில் மாற்றப்பட வேண்டும்" என்றார். இப்பகுதியில் பெருமளவு மக்கள் சூறாவளியினால் பாதிக்கப்பட்டபோதிலும் எதுவிதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை. சூறாவளிக்காக வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட பெருமளவு பணமெல்லாம் கார்ப்பரேஷனுக்குள் அமுக்கப்பட்டது எவ்வளவு படுமோசமான செயலாகுமென்றும் குற்றஞ்சாட்டினார்.

கார்ப்பரேஷன்காரர்கள் எந்நேரத்திலும் ஓரேவிலையில் மீன்களை வாங்குவதில்லையென்றும் அதனாலேயே வியாபாரிகளுக்கு மீன்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறதென்றும் பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. — —

## சுந்தரர் குருபூசை

வவுனியா, திங்கள் "நாயன்மார் நால்வரும் எமது சமய குரவர்கள். இவர்கள் சைவசமயிகள் வாழும் வகையை வகுத்துச் சென்றனர். இந்த நாலு சமயாசாரியர்களும் எமக்கு வகுத்துள்ள கோட்பாடுகளின்படி நாம் நடக்கவேண்டுமென்னும் கருத்தை வைத்தே; நாலுபேர் சொன்னபடி நடக்கவேண்டும் என்ற வழக்கம் இன்றும் இருந்துவருகின்றது. சுந்தரமூர்த்தி நாயனார் தனது பக்திப்பிரவாகத்தினால் இறைவனுடன் தோழமை பூண்டு வாழ்ந்து பல அற்புதங்களையும் நடத்தியிருக்கிறார். இவர்களின் வரலாற்றை இளைஞர்கள் அறிந்து உணர்ந்து படித்தால் சமய பக்தி வளரும். அறவாழ்வு வாழ வழிபிறக்கும்."

இவ்வாறு கலவெட்டித்திடல் நாகேசுவர வித்தியாசாலையில் நடைபெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத்தின வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஆர். சி. சுப்பிரமணியம் கூறினார்.

மாணவர்கள் நாயனார் பாடிய திருமுறைகளை இடையிடையே ஓதினர். திரு. வே. மயில்வாகனம், திரு. செ. கந்தையா, கிராமசேவகர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பியும் பேசினார்கள். ஆசிரியை செல்வி பரமேஸ்வரி கனகசபை நன்றி கூறினார்.

## சைவமகாசபை தீர்மானங்கள்

மீசாலை, திங்கள் "எமது பிரதமர் டட்லி சேனநாயகா கதிர்காமத்திலுள்ள இராமகிருஷ்ணமிஷன் மடத்தை நன்கு ஆதரிப்பவர், சமய சமரசம் கண்ட இளம் ஞானி இவர் தந்தையார் டியர் சலவைக் கல்லில் இம்மடத்தில் மிளிர்வதைக் கண்டு சகிக்க முடியாதவர்கள்" புனித நகர அமைப்பு என்ற போர்வையில் இம்மடத்தையும் இதர மடங்களையும் அகற்றத் திட்டமிட்டனர்.

இத்தருணத்தில் மடங்களை அகற்றும் முயற்சியைக்கைவிடக்கூடிய பொது சன அபிப்பிராயத்தை உண்டுபண்ணவேண்டியது இத்தகைய சபைகளின் பணியாகும்" என்று தென்மராட்சி சைவமகாசபையின் விசேஷ கூட்டம் மீசாலையில் தலைவர் திரு சி விஜசித்தம்பி தலைமையில் நடைபெற்றபோது செயலாளர் திரு இ. த. சுப்பிரமணியம் கூறினார்.

இக்கூட்டத்தில் சைவமடங்களை அகற்றக்கூடாது என்று திரு க. பொ கனகநாயகம் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். ஆடி அமாவாசைத்தினத்துடன் சித்திராபூரணையையும் மகா சிவராத்திரிக்கு இரு தினங்களும் விடுமுறைகளாக்கப்படவேண்டும்" என்றும் திரு க. பொ கனகநாயகம் பிரேரித்தார்.

இப்பிரேரணைகளை சங்கீத பூஷணம் திரு சி விஜசித்தம்பி ஆதரித்துப் பேசினார். பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின. — —

## திசைதிரும்பும் திருடர் தொல்லை

பருத்தித்துறை, திங்கள் கரணவாய்ப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் திருட்டுக்கள் தற்போது பருத்தித்துறை,புலோலி ஆகிய இடங்களை நோக்கித் திசை திரும்பி இருப்பதாகத்தெரிய வருகிறது.

பெருமளவில் திருட்டுக்கள் நடைபெறவில்லை எனினும் திருடர்கள் நடமாட்டம் சில வீடுகளில் காணப்பட்டதாயும் அவர்கள் அகப்பட்ட தளபாடங்கள் துணிமணிகளுடன் ஓடி மறைந்துவிட்டனரெனவும் தெரிவிக்கப்படுகிறது:

இங்குள்ள பாடசாலையொன்றினுள் புகுந்து சில பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனரெனவும் தெரியவருகிறது.

# நிர்வாக மொழியாலே நிம்மதி கிடைக்கும்

## நயினாதீவில் மந்திரி திருச்செல்வம்

ஊர்காவற்றுறை திங்கள் "தமிழ்மக்கள் எங்கு வசித்தாலும் சரி, அவர்கள் தன்மானத்துடன் வாழவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்மொழி நிர்வாக மொழியாக இருக்கவேண்டும். இந்த இலட்சியத்தை அடையும்வரை எனக்கு நிம்மதி ஏற்படாது. சட்டரீதியாக எமது பிரச்னைகள் தீரவேண்டும். சிங்களப் பெருமக்களுடன் ஒத்துழைப்பதன் மூலம்தான் உரிமைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்குஉண்டு."

இவ்வாறு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு.திருச்செல்வம் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நயினாதீவுக் கிராமசபையாரால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மந்திரி திரு. திருச்செல்வம் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி தேவஸ்தானத்திற்குச் சென்று தரிசனம் செய்ததைத் தொடர்ந்து ஊர்வலம் கூட்ட மைதானத்தை நோக்கிச் சென்றது. மந்திரியுடன் தீவுப்பகுதி எம். பி. திரு நவரத்தினம், திருமதி நவரத்தினம், மந்திரி [illegible] செல்வம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர், திருமதி மாணிக்கவாசகர் ஆகியோரும் சென்றனர். வடபகுதி கிராமசபைகளின் சமாஜத் தலைவர் திரு. ஏ. ஜி. இராசசூரியரும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார். நயினை தேவஸ்தான தொண்டர் காரியாலயம், யாத்திரீகர் தங்குமடம், நயினாதீவு சனசமூக நிலையம், நாகபூஷணி வித்தியாசாலை ஆகிய இடங்களில் மந்திரிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

கிராமசபைத் தலைவர் திரு சி. க. தம்பையா தலைமையில் நடந்த பொது வரவேற்புக் கூட்டத்தில் கிராம மக்கள் சார்பில் மந்திரிக்கு வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் மந்திரியை வரவேற்றுப் பேசினார். வேறு பலரும் கூட்டத்தில் பேசினர். நயினாதீவுக் கிராம சபை மந்திரிக்கு பகல் விருந்தளித்தது.

கழிவுநீர் விநியோகத் திட்டம் குறித்தும், கரையோரங்கள் நீரால் பாதிக்கப்படுவது குறித்தும் மந்திரிக்கு கிராமசபை மகஜர் ஒன்றை சமர்ப்பித்தது.

## நாடும் நடப்பும்

உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறுகிறது. அதைச் சிறுவர் சிறுமியர் பார்த்து மகிழ்கின்றனர். அவர்களின் முகத்தில் தோன்றும் பலவிதமான உணர்ச்சிபாவங்கள் அப்பப்பா! "சோவியத் நாடு" என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட புகைப்படங்களில் இக்காட்சியைக்கண்டு மகிழ்ந்தேன்.

* * *

யாழ்ப்பாணம் முற்றவெளியில் சென்ற சனிக்கிழமை மாலை பாடசாலைகளுக்கிடையே உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. 28 பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்துகொண்டன. இருந்தும் இரண்டாயிரம் பேர் கூட இப்போட்டிகளைப் பார்க்க வந்திருந்தனரோவென்பது சந்தேகம். பெரியோர்களும் சிறுவர் சிறுமியரும் இவ்விதவிளையாட்டுப் போட்டிகளுக்கு வந்திருந்து போட்டிகளில் பங்குபற்றும் மாணவ மாணவியரை உற்சாகப்படுத்தாமல் விட்டால் விளையாட்டின் தரம் எப்படி உயரும்? அன்றைய விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டவர் கூட யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுத் தரம்குறைவாக இருப்பதாகக் குறைப்பட்டார். பலரும் பல தடவைகளிலும் விளையாட்டுத் தரம் யாழ்ப்பாணத்தில்குறைவாக இருப்பதாகக் கூறியிருக்கின்றனர். ஆனால் தரத்தை உயர்த்துவதற்கு செயலில் எதுவும் செய்யக்காணோம் இங்குள்ள பாடசாலைகள் ஒன்றுசேர்ந்தோ அரசாங்கத்தின் உதவியுடனோ உடற்பயிற்சி விளையாட்டுக்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தால் என்ன? வெளிநாடுகள் விளையாட்டுத்துறையில் உலகில் நெம்புகழும்பெயரும்பெற்றுள்ளன விளையாட்டுத்துறையில அந்நாட்டு அரசாங்கங்கள்மட்டுமல்ல பொதுமக்களும் ஆர்வம் காட்டுகின்றனர், வெளிநாடுகளிலிருந்து விளையாட்டுத்துறையில் பெயர்பெற்றவர்களை இங்குள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்க அழைக்கலாம். இங்குள்ள வீரர் எதிர்வீரசிங்கத்தைக்கூட வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவிட்டோமே!

* * *

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு பெற்றோர்கூட பெருமளவில் வந்துசேரவில்லை. பிள்ளைகளின் சாதனையைப் பார்க்கவும் ஆர்வமூட்டவும் அவர்களுக்கு விருப்பமில்லையா? ஆசிரியர்கள் கூடக் குறைவாகவே வந்திருந்தனர்.ஏன் இந்தநிலை? இனியாவது இந்நிலை மாறுமா?

—ஊர்சுற்றி

## இன்று பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை, செவ்வாய் தெல்லிப்பழை பாலர்ஞானோதய சபை 19-வது ஆண்டுப் பரிசளிப்பு விழா ஆகஸ்ட் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் வலிகாமம் வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு தி முருகேசபிள்ளை தலைமையில் நடைபெறும்.

பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. இ. நம. சிவப்பிரகாசம். திரு. அ. சரவணமுத்து ஆகியோரின் சொற்பொழிவுகளும் இசைமணி வ. செல்லத்துரையின் இன்னிசைக்கச்சேரியும் அன்று இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜம்முகாஷ்மீரில் புதிய நெருக்கடிநிலை

## பாக். - இந்திய துருப்புகள் மோதலில் அதிக உயிர்ச்சேதம்

### நிலைமை மோசம் என நந்தா அறிவிப்பு; பாதுகாப்பு துருப்புகள் பலப்படுத்தப்பட்டன

புதுடில்லி, ஆக. 9

ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர்களின் ஊடுருவல்களினால் ஜம்மு காஷ்மீரில் மோசமான நிலை ஏற்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. ஊடுருவல் செய்த ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர்களுக்கும் இந்திய துருப்புக்களுக்குமிடையே பலமான சண்டை நடைபெற்றதென்றும் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குபாதுகாப்புப் படைகள் பலப்படுத்தப்படுள்ளன. இந்திய மத்திய மந்திரிசபையின் அவசரக் கமிட்டி நேற்று அவசரமாகக் கூடி ஜம்மு காஷ்மீர் நிலைமை குறித்து விவாதித்தது.

கடந்த இரு நாட்களாக ஜம்மு கஷ்மீரில் பதற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆயுதம் தரித்த ஏராளமான பாகிஸ்தானியர்கள் இப்பகுதியில் ஊடுருவல் செய்து இந்திய துருப்புக்களுடன் சண்டை செய்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் திட்டமிட்ட நாசவேலையொன்றில் ஈடுபட்டனர் என்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றிரவு இந்திய மந்திரி சபையின் விசேஷ கமிட்டியின் அவசரக்கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பாதுகாப்பு மந்திரி சவான், உள்நாட்டு மந்திரி திரு குல்சாரிலால்நந்தா ஆகியோர் உட்பட வேறு சில மந்திரிகளும் வந்திருந்தனர். தென்னாட்டின் ஒரு பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தபாதுகாப்பு மந்திரி, தமது விஜயத்தை நிறுத்திக்கொண்டு உடனடியாக புதுடில்லி திரும்பியிருந்தார். இக்கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

**"நிலைமை மோசம்"**

இக்கூட்டத்தில் உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா தெரிவிக்கையில் ஜம்மு காஷ்மீரில் நாசவேலை ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டதென்றும் ஆனால் அது தோல்வியில் முடிந்துவிட்டதென்றும் கூறினர்.

இச்சதிவேலை, முன்னேற்பாட்டின்படி திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டதாக திரு நந்தா அறிவித்திருக்கிருர்.

ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## தனிப்பட்ட வானொலி நிலையம்?

ஜம்மு காஷ்மீரில், இந்திய அரசாங்கத்துக்கு எதிராக புதிய வானொலி நிலையமொன்று அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்காக இந்த வானொலி பாடுபடும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இந்த வானொலி நிலையம் சரியாக எங்கு இருக்கிறது என்பது குறித்து உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## மணிக்கு 50,000 கடிதங்கள்

### மின்கருவி பிரிக்கிறது

மூனிச், ஆக 9

மேற்கு ஜெர்மனியில் மின்சாரத்தினுல் இயங்கும் கடிதங்களை ஊர்வாரியாக பிரித்தடுக்கும் கருவி மணிக்கு 50,000 கடிதங்களைப் பிரித்து அடுக்குகிறது. இக்கருவியைப் பொருத்த 11 லட்சம் டாலருக்கு மேல் செலவாகியுள்ளது. இக்கருவி அண்மையில் தென் ஜெர்மன் நகரான புபோஜேகியில் அஞ்சல்நிலையத்தில் நிறுவப்பட்டது. மாவட்டவாரியாக ஜெர்மனிக்கு வருகிற, ஜெர்மனியிலிருந்து வெளியிடங்களுக்கு செல்லும் அஞ்சல்களைப் பிரித்து தருகிறது. ஆனல் தெருப்பெயர்களையும் சிலவகையான எண்களையும் மட்டும் அதனால் வாசிக்க முடிவதில்லை. ஆகவே முதலில் இதை செய்ய ஆட்கள் தேவைப்படுகின்றனர். முற்றிலும் தானாகவே இயங்குகின்ற அஞ்சல்களைப் பிரிக்கும் கருவி அண்மையில் மூனிச்சில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

கூடியவிரைவில் மின்விசையினால் அஞ்சல் கட்டுகளைப் பிரித்து எடுக்கும், பின்பு ஊர்வாரியாக சேர்க்கும் கருவிகள் மூனிச், ஹாம்பர்ச், பிராங்பர்ட், மெய்ன், போக்கும், கோட வென்ட்ஜ் போன்ற இடங்களில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் வைக்கப்படும். ஆகவே இதன் மூலம் நாளுக்குநாள் கடிதப்போக்குவரத்து பெருகி வருவதினால் ஏற்படுகிற பிரச்னைகளை ஜெர்மன் சமாளிக்குமென்று நம்பப்படுகிறது. தற்போது நாள்தோறும் சராசரி 800 லட்சம் கடிதங்களை அஞ்சல் துறையினர் பட்டுவாடா செய்து வருகின்றனர்.

அஞ்சலதுறையினர் திட்டமிட்டசிக்கனச் சீரமைப்புத் திட்டத்தின்படி ஜெர்மன் மக்களில் 92 சத வீதத்தினர் எல்லா கடிதங்களுக்கும் 'கோடு' எண்களையும பார்சல்களில் குறிப்பிட்ட 'கோடு' எண்களை 95 சத விகிதத்தினரும் சரியாகப் போடுகின்றனர்.

## குருடர்களுக்கு வாழ்வளிக்க முயற்சி

பெர்லின், ஆக. 9

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் குருடர்கள் சங்கத்தின் 8-வது காங்கிரசில் 4 கண்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். குருடர்களுக்குத் தொழில், சமுதாய கலாசார வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதே இச்சங்கத்தின் நோக்கம்.

தொழில் நுட்பசாதனங்களின் உதவியைக்கொண்டு அவர்களுக்குப் பல்வேறு தொழில்களும், வர்த்தகமும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன என்று சங்கத் தலைவர் ஒரு பேட்டியில் கூறினர். கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்கள் 12 உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துகின்றன.

குருடர்கள் 10 ஆண்டுகள் வரை விசேஷ பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். புனர்வாழ்வளிக்கும் [illegible] அவர்களுக்கு முழுவாழ்வு வாழ உதவிசெய்கின்றன.

இந்தச் சங்கம் ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலுள்ள குருடர்களுக்கும் இவ் போதனைக்குரிய விசேஷ சாதனங்களை [illegible]

## பூமிக்கடியில் ஐந்து அடுக்கு நிலையம்

ஹாம்பர்ச், ஆக 9

ஹாம்பர்க நகரில் பூமிக்குக்கீழே 66 அடியில் ஐந்து அடுக்கு மாடிக் கட்டட நிலையம் கட்டப்படும். இது நகரின் நடுவில் ஏற்படுத்தப்படும். நகரில் செல்லக்கூடிய எல்லா போக்குவரத்துக்களையும் இந்த நிலையம் வழியாக திருப்பிவிடப்படும். அப்போதுதான் மக்கள் ஹாம்பர்க் நகர் முழுவதற்கும் மற்றைய அண்டை பகுதிகளுக்கும் இடையூற இன்றி செல்ல முடியும் எனக் கருதப்படுகிறது. அதில் ஒரு பிளாட்பாரமும் மற்றொரு பிளாட்பாரம் நல்ல முறையில இணைக்கப்பட்டிருக்கும். அங்கு கடைகளும் விடுதிகளும் இருக்கும். அவ்வழியே செல்கிறவர்களுக்கு பொருட்களை வாங்கிக்கொண்டு போக இது ஏதுவாகும் ஆகவே பூமிக்குள் 'நகருக்கு அடியில் ஒரு நகரம்" அமைக்கும் வேலை 1971-ம் ஆண்டுக்குள் முடிவடையுமென்று நம்பப்படுகிறது'

## கவர்ச்சி ஆசை

பெர்லின், ஆக. 9

மேற்குப் பெர்லின் உடையலங்கார நிபுணர் தாம் தயாரித்துள்ள புதுரக ஆடைக்கு 'மேடய' ஐரோப்பா என்று பெயரிட்டுள்ளார் இந்த ஆடை கறுப்பு நிறமுள்ளது, 'ஜார்ஜெட்'' "ஆர்கண்டி" போன்ற ரக துணிகளுடன் கூட செருபுக கோழியின் இறகுகளும் இதில் வைத்துத் தைக்கப்பட்டுள்ளன. ஆடை அலங்கார நிபுணரின் பெயர் ஹெய்ன்ஸ் ஒஸ்டர்கார்டு வாஆக்டனில் உள்ள ஜெர்மன் தூதர் மனைவிக்கும் நியூயோர்க் நகர் பிளாசா ஓட்டலுக்கு துணி அலங்காரங்களைச் செய்தவரும் இவரே.

## டயரின் நீடித்த பாவனைக்கு வழி

லண்டன், ஆக. 9

டயர்களும் இதர பொருட்களும் அதிக உஷ்ணத்தால் விரைவில் உபயோகமற்றுப் போவதைத் தடுப்பதற்கான ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஒரு வர்த்தக நிறுவனம் ஒரு புதிய விசேட ரசாயன எண்ணெய்ப் சொருளைக் கண்டு பிடித்துள்ளது. இந்த எண்ணெய்ப் பொருள் செப்டம்பரில் லீப்சிக் நகரில் நடைபெறும் சர்வதேசச் சந்தையில் காட்சிக்கு வைக்கப்படும்.

## "இளைஞர்களிடையே முதலில் தாய் மொழிப்பற்று வேண்டும்"

சோண்டாவில், திங்கள்

"அந்நிய மொழிகளிலும், நாகரிகத்திலும், மோகங்கொண்டலையும் நமது இளைஞர்களின் கவனத்தைத், தாய்மொழியையும், மொழியுடன் தொடர்புள்ள இலக்கியம் நாடகம் போன்ற தேசியகலாச்சாரம் பக்கம் திருப்பும் பாரிய பொறுப்பு பொதுச்சேவைக் கழகங்களையேசாரும். இப்பெரும்பொறுப்பை உணர்ந்து கழகங்கள் சீரிய முறையில் செயலாற்றவேண்டும். கழகங்கள் நடாத்திவரும் கலை விழாக்கள் கிராமியக்கலைத் துறையில் நம்மவரை ஓரளவுக்கு இட்டுச்செல்கின்றது என்பவற்றை கழகங்களின் பொறுப்பாளர்கள் உணர்ந்து எமது இளைஞர்கள் இலக்கியத்துறையில், கிராமியக் கலையில், சிறந்து விளங்குவதற்கு வழிகாட்டிகளாக அமையவேண்டும்."

வயாவிளான் கன்னெறிக் கழகமண்டபத்தில் நடைபெற்ற பொதுச்சேவைக்கலைக் கழக பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. சி. ஆறுமுகம் தமது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிராமியக்கலை, இலக்கியக் கலை ஆகிய கலைகளை வளர்ப்பதுடன் மட்டும் நில்லாது தேசிய விளையாட்டுக்களையும் இளைஞர் மத்தியில் வளர்ப்பதற்கு சேவைசெய்ய கழகங்கள் முன்வரவேண்டும் பலதுறைகளிலும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்கும் தலையாய நோக்குடன் சங்கங்கள் போட்டிபூசல்கள், சாதிப்பூசல்கள், சமய பூசல்கள் ஆகியவற்றை ஒழித்து மக்களின் நல்வாழ்விற்கு வித்திடும் பணியில் முன்னின்று உழைக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

திருவாளர்கள் க திருநாவுக்கரசு, தா. கந்தையா, க. கந்தையா, சி. குணநாயகம் ஆகியோரும் பேசினர்.

## ஒலிம்பிக்கோஷ்டிகள்

பெர்லின், ஆக. 9

எல்லா ஒலிம்பிக் விளையாட்டுகளிலும் இரு ஜெர்மன் ராஜ்யங்களிலும் இருந்து தனித்தனியாக இரு ஒலிம்பிக் கோஷ்டிகளை அனுமதிக்கவேண்டுமென்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு எழுதியுள்ளது.

இதுபற்றி ஸ்பெயினில் நடைபெறவிருக்கும் குழுவின் மகாநாட்டில் முடிவுசெய்யப்படும். இரு ஜெர்மனிகளும் சேர்ந்து ஒரே ஒலிம்பிக் கோஷ்டியை அனுப்ப வேண்டுமென்பதே சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கோரிக்கை. இக் கோரிக்கையை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நிராகரித்துவிட்டது.

## 'இலவச நெல் வழங்குக'

கோண்டாவில், திங்கள்

வட்டமாகாண கமக்காரர்களுக்கு இலவச நெல் வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரும் தீர்மானம் மல்லாகக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

அளவெட்டி, மல்லாகம் ஆகிய கிராமங்களில் விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்த நன்கொடை அரசாங்கத்திடம் கோருவது, மல்லாகம் கிராமசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்குப் பொதுவாக தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவது, கலாச்சாரங்களை வளர்க்கும் சனசமூக நிலையங்களுக்கு வி-வடக்குக் காரியாதிகாரியூடாக மத்திய அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு கலாச்சாரநன்கொடைப் பணம் பெற்றுக்கொடுப்பது போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## ரேடியோ ரசிகர்கள் பெர்லினில் கூடினர்

பெர்லின், ஆக. 9

பெர்லின் ரேடியோ திடலில் ஸ்காண்டிநேவியா, இங்கிலாந்து பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து ரேடியோ ரசிகர்கள் கூடினர்கள். ஜெர்மனியில் ரசிகர்கள் 40 வது ஆண்டுவிழாவை யொட்டியே இவர்கள் கூடியிருக்கனர். இவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கும் கலையாக விளங்குகிறது.

## பம்பாய் வெங்காயம் அறுவடை

யாழ்ப்பாணம், செவ்,

யாழ். மாவட்டத்தில் முதல் முதலாக பம்பாய் வெங்காயம் அறுவடை வைபவம் திருநெல்வேலி அரசினர் பண்ணைக்கு முன்னுலுள்ள திரு. த. சிவலோகநாதனுக்குரிய தோட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

விவசாயப் பகுதி உதவி அதிபர் டாக்டர் இ எல். அப்பரட்ணவும் இக் கமத்திருநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வார்.

## குடிசையில் குடிபுகுந்த குமரன்

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணைக் கிராமத்தில் சேரிப்பகுதியில்வசிக்கும் முருகபக்தை ஒருவரின் குடிசையில் தோற்றுவிக்கப்பட்ட வேல் முருகன் குடிசைக் கோட்டத்தில் தினமும் நூற்றுக்கணக்கான அடியார்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

சென்ற வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற விசேட பூசையின்போது வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் உருவப்படம் ஒன்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

"குடிசைக் குமரன்" எனப் பலராலும் விரும்பி அழைக்கப்படும் சரவணை செல்வககதிர்காம சுவாமிக்கு ஆலயம் கட்டி எழுப்புவதற்கு ஆலய நிர்வாகிகள் முயற்சி எடுத்துவருகின்றனர். வேற்றுமை எதுவுமின்றி எல்லோரும் ஒரே குலமாய்க் கூடுமிடமாக இது இருக்கிறது. ஆன்மீக உணர்ச்சியை ஊட்டும் முருகன் பக்திப் பாடல்கள் தினமும் காலை மாலைகளில் பாடப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் கதிர்காம தினபூர்த்தினையொட்டி எதிர்வரும் வியாழக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பகல் அன்னதானம் நடைபெறும்.

முருகவழிபாட்டின் மூலம் தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்பது தனது அவா என முருகபக்தை பொன்னம்மா தெரிவித்தார்.

## வேலைநிறுத்தமும் மந்திரியும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் வேலைநிறுத்தத்தையொட்டி தொழில் மந்திரி திரு. எம். எச். முகமது நேற்று சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியபின் வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படியும் தான் மூவர் அடங்கிய ஒரு சபையை இப்பிரச்னையை தீர்த்துவைப்பதற்காக நியமிப்பதாகவும் கூறினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்



# பறக்கும் தட்டின் விமானி செவ்வாய் வாசியா?

— மகான் —

கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் இங்கு வெளியான "பறக்கும் தட்டின் மர்மம்" என்ற கட்டுரையில் நாம், பறக்கும் தட்டைத்பற்றி ஓரளவு ஆராய்ந்தோம். இப்பொழுது பறக்கும் தட்டைப்பற்றிய மேலும் விபரங்களையும் செவ்வாய்க்கிரகத்துக்குள்ள அதன் 'ஒற்றுமை' குறித்தும் ஆராய்வோம்.

1947-ம் ஆண்டில் தான் பறக்கும் தட்டுகள் பூவுலக வாசிகளின் கண்களுக்கு முதலில் தென்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனைத் தொடர்ந்து சில வருடங்களாக உலகின் பல பகுதிகளிலும் இந்த பறக்கும் தட்டுகள் உலாவித்திரிந்ததை பலர் கண்டிருக்கின்றனர்.

ஒரு விஷயம் இப்பொழுது தெளிவாகப் புரிகிறது. அது... செவ்வாய்கிரகத்துக்கு செய்மதி அனுப்பப்பட்ட பின்னரே பறக்கும் தட்டுகளின் படையெடுப்பு இப்பொழுது அதிகமாகிவிட்டது என்பதே.

பறக்கும் தட்டுகள் கடந்த இரு மாதங்களில் உலகின் பல பகுதிகளிலும் காட்சி கொடுத்து வருகின்றன கடந்த வாரத்தில் வடக்கு பிரேஸிலிலும், சிலி என்ற நாட்டின் தலைநகரான சந்தியாகோவிலும், இந்த பறக்கும் தட்டுகள மனிதனின் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றன இதிலும் ஒரு அதிசயமென்னவென்றால்; சாந்தியாகோவில் பறக்கும் தட்டொன்று பூமியில் இறங்கி, பின்னர், (மனிதனைக் கண்டு பயந்தோ?) விரைந்து சென்றிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் பறக்கும் தட்டுகளின் "படையெடுப்பு" இப்பொழுது அதிகரித்திருக்கிறது.

"பூவுலக வாசிகளுடன் நாங்கள் விரைவில் நேரடித் தொடர்பு கொள்ள விருக்கின்றோம்" என்று பறக்கும் தட்டு "விமானி" பூவுலக விஞ்ஞானியொருவருக்கு அறிவித்திருக்கிறாரென்றால் அவர்களின் விஞ்ஞான முன்னேற்றம் எப்படி இருக்கிறது?

இப்பொழுது கிடைத்து வரும் பல தகவல்களிலிருந்து பறக்கும் தட்டுக்கும் செவ்வாய்க் கிரகத்திற்குமிடையே 'ஒற்றுமை' இருப்பதாகத் தெரியவருகிறது. இதை நோக்கையில் பறக்கும் தட்டின் விமானி, செவ்வாய் வாசியாக இருக்கலாம் என்பதுகூட இப்பொழுது நிரூபணமாகிக் கொண்டு வருகிறது.

செவ்வாய்க் கிரகத்தின் அமைப்புகள் குறித்து ஆராய்வதற்காக அண்மையில் அமெரிக்கா "மெரினர்-4" என்ற செய்மதியை அங்கு அனுப்பியிருந்ததல்லவா? இந்த செய்மதி அங்குசென்று படம் பிடித்து. படங்களை "சைகைமூலம்" பூமிக்கு அனுப்பியிருக்கின்றன. இந்தச் செய்மதி செவ்வாய் நோக்கிச்சென்றதன் பின்னரே பறக்கும் தட்டுகள் பூமிக்கு அதிகமாக வரத் தொடங்கியிருக்கின்றன. இதிலிருந்து செவ்வாய்க்கும் பறக்கும் தட்டுக்கும் ஒருவகை ஒற்றுமையிருப்பது புலனாகிறதல்லவா? பூவுலக விஞ்ஞானிகள் அங்கு செல்லமுனைவர் அவர்கள் இங்குவந்து தங்கி விடுவார்களோ என்று விஞ்ஞானிகள் இப்பொழுது கவலை கொண்டிருக்கின்றனர்.

பறக்கும் தட்டின் மர்மம் இப்பொழுது புரியத்தொடங்கியுள்ளது. அந்த "தட்டில்" இருப்பவர்கள் மனிதரைவிட மிகவும் உயரம் குறைந்தவர்களாகத் தானிருப்பார்கள் என்பதும் பறக்கும் தட்டின் வேகம் அளவிடமுடியாதது என்பதும் இப்பொழுது புலனாகிவிட்டது. நமது விஞ்ஞானிகள் அங்கு செல்லமுனைவர் செவ்வாய் வாசிகள் விரைவில் [illegible]

(தொடரும்)

## அலிபாபாவின் அனுபவங்கள்

— மாஸ்டர் சிவலிங்கம் —

"நண்பர்களே! நம்மை ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது, நாம் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்... நம்மால் தொலைத்துக் கட்டப்பட்ட ஒருவனுக்குத்தான் குகையில் இரகசியம் தெரியுமென எண்ணியிருந்தேன்... ஆனால் வேறு ஒருவனுக்கும் இரகசியம் தெரிந்திருக்கிறது... எப்படியாவது அவனை விரைவில் கண்டுபிடித்துத் தொலைத்துக்கட்டவேண்டும். இல்லாவிட்டால் நாமெல்லாம் தொலைத்துக் கட்டப்படுவோம்..." என்று உணர்ச்சியுடன் பேசிய திருடர் தலைவன் ஒரு கணம் கூட்டத்தினரின் முகபாவத்தை அவதானித்துவிட்டுத் தொடர்ந்து பேசினான்.

"உங்களிலே துணிவும், தந்திரமும் ஒருங்கே அமைந்த ஒருவன் வழிப்போக்கனைப் போல வேடமணிந்துகொண்டு நகரத்திற்குள் நுழையவேண்டும். யாராவது அகாலமரணமடைந்ததாக எங்காவது பேச்சு அடிபட்டால், மரணமடைந்தவனின் வீட்டை நாளுக்காக அடையாளமிட்டுவிட்டு வரவேண்டும். ஆனால் ஒன்று... 'யாராவது தவறான தகவல் கொண்டுவந்தால் தலை துண்டிக்கப்படும்' என்று உறுதியான தொனியில் கூறிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

எங்கும் மயான அமைதி நிலவிக்கொண்டிருக்கையில்... "உங்கள் நிபந்தனைக்கு நான் கட்டுப்படுகிறேன்... உண்மையைக் கடைப்பிடித்த பின்பே நான் உங்கள் மத்தியில் வருவேன்... இல்லாவிட்டால் இந்தப்பக்கமே தலைகாட்டமாட்டேன்... இதுசத்தியம்!" என்று முழங்கினான் ஒரு முரட்டுத் திருடன். "வெற்றியோடு சென்றுவா" என்று கையசைத்தான் தலைவன். தலைதாழ்த்தி வணங்கியபடி வெளியேறினான் அந்த முரட்டுத் திருடன்.

அடுத்த நாள்... அதிகாலை! மாறுவேடத்தில் நகர வீதியில் நடந்துகொண்டிருந்த முரட்டுத் திருடன் செருப்புத் தைப்பதில் ஈடுபட்டிருந்த முஸ்தபாக் கிழவரைக் கண்டதும் கடையுள் நுழைந்து வணக்கங் கூறியபடி அங்கு கிடந்த ஒரு வாங்கில் அமர்ந்துகொண்டான்.

'பெரியவரே! இந்த வயோதிப காலத்தில் வெளிச்சம் குறைந்த இந்த அறைக்குள்ளிருந்து எப்படிச் செருப்புத் தைக்கிறீர்கள்? உங்களுக்குக் கண்பார்வை சற்றுக் கூர்மை போலும்!" என்று கிண்டலாகக் கேட்டான்.

முஸ்தபாக் கிழவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "யாரப்பா நீ! என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டாய்? எனது கண்பார்வையின் கூர்மை உனக்கு எப்படித் தெரியப்போகிறது... நேற்று இரவு இதைவிட வெளிச்சங் குறைந்த ஒரு இடத்தில் பிரேதமொன்றை அழகாகப் புரைந்து பரிசு பெற்றேன். அப்படிப்பட்ட எனது கண்பார்வையைக் கிண்டல் செய்ய உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்...!' என்று சீறி விழுந்தார்.

தான் வந்த காரியம் இவ்வளவு விரைவில் கைகூடுமென்று அவன் கற்பனை கூடப் பண்ணவில்லை. விஷமப் புன்னகையுடன் "என்ன! பிரேதத்தைப் புரைந்தீரா? ஆச்சரியமாக இருக்கிறதே... யாருடைய பிரேதம்?" என்று நாலுக்கால கேள்விகளைத் தொடுத்தான். மோசியாவின் எச்சரிக்கை திடீரென்று நினைவிற்கு வரவே தன்னைச் சமாளித்துக்கொண்டு "யாராயிருந்தால் உனக்கென்ன..." என்று வேண்டா வெறுப்புடன் கூறிக்கொண்டே தனது வேலையில் ஈடுபட்டார்.

திடீரென்று...! ஒரு தங்க நாணயத்தைக் கிழவர் முன் வீசிவிட்டு "இதைப்போல பல தங்க நாணயங்களைப் பெற விரும்பினால்... பிரேதத்தைப் புரைந்த இடத்தை அடையாளங் காட்டுங்கள். இல்லாவிட்டால் நஷ்டமடைவது நான் அல்ல..." என்று கூறியபடி வெளியே செல்வதுபோலப் பாசாங்கு செய்தான்.

பேராசை கொண்ட முஸ்தபாக் கிழவர் வீட்டைக் காட்டுவதற்குச் சம்மதித்தார். அன்றிரவு...! மனித நடமாட்டம் குறைந்த அகால நேரத்தில் கிழவர் முரட்டுத் திருடனை அழைத்துச் சென்று காசீமின் வீட்டை அடையாளம் காட்டினார்.

ஆரம்பத்தில் அவன் நம்பவில்லை, பின்பு கிழவர் சத்தியம் பண்ணிக் கூறியதும்தான் நம்பினான். அவன் ஏற்கனவே வாக்களித்தபடி கிழவருக்குப் பல தங்க நாணயங்களை அள்ளிக் கொடுத்தான். கிழவர் விடைபெற்றுக் கொண்டதும் சிறிது நேரம் அப்படியே அசையாது சிலைபோல் சிந்தனையில் நின்றான். கிழவரின் உருவம் முற்றாக மறைந்ததும்... வெண்கட்டி ஒன்றினால் காசீமின் வீட்டுக் கதவில் ஒருவித அடையாளமிட்டுவிட்டு [illegible] வேகமாக ஓடினான்.

(தொடரும்)

## கொல்லிமலைச் சாரலிலே...!

— "வாகீஸ்" —

எவ்விதமான கரடுமுரடுமின்றி சாதாரணமாக இருந்தது அந்த இடம்! ஆச்சரியத்துடன் அவ்விடத்தைக் கூர்ந்து கவனித்தார், குதிரையின் குளம்பு அடையாளங்கள்! காலணிகளின் அடையாளங்கள்!!

காலடையாளங்களில் சில சி ஐ டி கள் அணியும் பாதரட்சைகளின் அடையாளங்களாக இருந்தன அவை கொலை செய்யப்பட்ட சி ஐ டியினுடையதாக இருக்கலாம்! ஆனால் மற்றவை.. உள்ளத்திலே ஒரு மின்னல்! ஒரு வேளை......ஏன் அப்படி இருக்கமுடியாது? சி ஐ டி பாஸ்கரின் உள்ளத்திலே எண்ண அலைகள் மோதுண்டன, எனினும் காரியத்திலே கண்ணாயிருந்தார்!

சமதரையை மேன்மேலும் ஊக்கமாக ஆராய்ந்தார். அவருடைய கழுகுக்கண்கள் ஒவ்வொன்றையும் உன்னிப்பாக ஆராய்ந்துகொண்டிருந்தன. அவை எதையோ கண்டு அகல விரிந்தன. அதை கையிலெடுத்தார். உள்ளத்திலே உவகை! முகத்திலே அதன் பிரதிபலிப்பு!!

என்ன! குற்றவாளி அகப்பட்டுவிட்டானா?

கொல்லிமலைப் பகுதியையே அலசி ஆராய்ந்து பார்த்துவிட்டார், சி ஐ டி பாஸ்கர் மேற்கொண்டு எவ்விதமான தடயங்களுமே கிடைக்கவில்லை. அலுப்படைந்த பாஸ்கர் தனது மோட்டார் சைகிளில் கொல்லிமலையை விட்டகன்றார்.

* * *

பொலிஸ் நிலயத்தை அடைந்த சி ஐ டி பாஸ்கர் தனக்கென்று ஒதுக்கப்பட்ட பிரத்தியேக அறையை அடைந்தார். தான், மலையில் கண்டெடுத்த பொருளை அங்கிருந்த 'பாதுகாப்பு அலுமாரியில்' வைத்துப் பூட்டினார். நிலயத்திலிருந்த அதிகாரிகளுடன் சிறிது நேரம் அளவளாவிவிட்டு மீண்டும் வெளியே புறப்பட்டார், பாதிரியுடையுடன்!

பொலிஸ் நிலயத்தைவிட்டு பாதிரி உடையில் புறப்பட்ட சி ஐ டி பாஸ்கர் தான் தங்கியிருந்த வீட்டை அடைந்தார். ஊரின் ஒதுக்குப்புறத்தே மாறு பெயரில் தான் அங்கு வசித்து வந்தார் பாஸ்கர்

மதிய உணவு உண்டுவிட்டு, அன்றைய தினசரிகளையெல்லாம் பார்வையிட்டார், பாஸ்கர். அவையாவும் கொல்லிமலை கொலைகாரனைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவமளித்துப் பிரகாசித்திருந்தன. அவரைப் பற்றியும் பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்திருந்தன. அந்த மகிழ்ச்சியைச்சிதறடித்தது அவருடைய பணியாள் சண்முகத்தினால் அன்றைய தபாலில் வந்ததாககொடுக்கப்பட்ட கடிதம்! ஒரு கணம் கடிதத்தை அவதானித்த பாஸ்கர் அதைப் பிரித்தார். அதற்குள்—

(தொடரும்)

## ஞாபகத்துக்கு ஒரு பரீட்சை

— "வரன்" —

(1) உலகில் மிக உயரமாக வளரும் மரம் யாது?

(2) பல்லுள்ள பறவை எது?

(3) புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

(4) சந்திரனில் தோன்றும் மறுக்கள் எவை?

(5) ஒரு கோழி எவ்வளவு காலம் வாழும்?

(6) ஒரு இராணித்தேனீ எத்தனை ஆண்டுகள் வாழும்?

(7) மத்திய ரேகையில் பூமியின் சுற்றளவு என்ன?

(8) செலுலயிட் எப்படிச் செய்யப்படுகின்றது?

(9) இருதயத்துக்கு இரத்தத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் உறுப்புக்கள் எவை?

(10) இலங்கையிலே சிவனொளிபாதமலையிலுள்ள அடிச்சுவட்டின் நீளமென்ன?

(11) கடல்நீரில் நூற்றுக்கு எத்தனை மடங்கு உப்பு இருக்கின்றது?

விடைகள்

(1) யூகலிப்டஸ் என்னும் மரம்.

(2) வௌவால்.

(3) கொலம்பஸ்.

(4) அவிந்துபோன எரிமலைகள்.

(5) பன்னிரண்டு முதல் பதினைந்து ஆண்டுகள் வரை

(6) ஏழு ஆண்டு வரையில்.

(7) 23,901 மைல்.

(8) செலுலாயிட், வெடி பஞ்சோடு கற்பூரம் வேறு பல பொருள்களும் சேர்த்து செய்யப்படுகிறது.

(9) இரத்தக்குழாய்கள்.

(10) ஐந்தரையடி நீளம்.

(11) நூற்றிற்கு மூன்றரை வீதம்.

## பிறந்தநாள் பரிசு

— புலவர் தமிழ்மாறன் —

நண்பகல் 12 மணி அந்தப் பத்திரிகை அலுவலகம் வெகு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இந் நேரம் நாற்பது வயதுமதிக்கத்தக்க ஒரு நடுத்தர மனிதர் உள்ளே நுழைந்தார் நேராக உதவியாசிரியரிடம் சென்றார். அவரோ இவரைக் கவனிக்காமல் ஆனந்தவிகடன் படிப்பதில் மூழ்கியிருந்தார்.

தம்பி!

நடுத்தர மனிதரின் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்த உதவியாசிரியர் ஒருமுறை அவரை ஏறஇறங்கப் பார்த்து; 'பத்து நிமிஷம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பழையபடி விகடனில் மூழ்கிவிட்டார்.

அடுத்த கணம் அவருடைய செருமல் குரல் கேட்டு விழிப்படைந்த உதவியாசிரியர் அலட்சியமாக விகடனைத்தூக்கி ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு "என்னவேண்டும்?" என்று வாயால் கேட்கவில்லை ஒரு பார்வையால் கேட்டார்.

"தம்பி! நான் ஒரு தொடர் கதை கொணர்ந்திருக்கிறன் அதை உங்க பத்திரிகையில் வெளியிடவேண்டும்"

'எங்கை கொடுங்க பாப்பம்" என்று சொல்லிக் கொண்டே உதவியாசிரியர் அந்த மனிதரிடமிருந்து ஒருபெரிய பைலை வாங்கினார், ஐந்து நிமிஷம் பக்கங்களைப் புரட்டிவிட்டு 'அவ்வளவு நல்லாயில்லையே' என்று சொல்லி உதட்டைப் பிதுக்கினார். வந்தவர் "அப்பிடியா ரொம்பநல்லது" என்று கண் சிமிட்டலோடும் சிரிபோடும் சொல்லிவிட்டு பைலையும் வாங்கிக்கொண்டு அந்த அலுவலகத்தைவிட்டு வெளியேறினார்.

அடுத்த நாள்!

ஐயா உங்களைஎடிட்டரையா தேடுறார் என்றான் அலுவலக ஊழியன்.

'சரி நான் போறன் நீபோ' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு உதவியாசிரியர் டிப்டொப்பாக டிறெஸ்களை சரிசெய்துகொண்டு இக்காலப் பெண்களைப்போல் ஸ்ரைலாக நடந்து ஆசிரியரின் அறையை அடைந்தார். அடுத்தகணம் பேய்பிசாசுகளைக் கண்டவர் போல் ஆனார். முதல்நாள் தொடர்கதை கொண்டுவந்த அந்த நடுத்தர மனிதர் ஆசிரிய நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்!

'உம்மடை பேரென்ன? அருள்நம்பி" என்றார் உதவி ஆசிரியர் "எதுவரையில் படித்திருக்கிறீர்? பி. ஏ ஐயா" பிறகென்ன நல்லபடிப்புப்படித்திருக்கிறீர் பேர்பெற்ற பத்திரிகையில் நுழைந்திருக்கிறீர். பிரபல்யமடைய நல்லவாய்ப்புண்டு அதுகிடக்க இந்தாரும் என்னுடைய பிறந்தநாள் பரிசு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அரிய சந்தர்ப்பம்

**அரைச்சலார்**

**22-8-65 மட்டும்**

வெண்காட்டுக் காய்கறி, பூ விதைகள், பசளை வகைகள் குத்தலாகவும் பக்கட்டாகவும் அரைவிலையில் விநியோகிக்கப் படுகிறது. கூடிய தொகை எடுப்பவர்கட்கு இலங்கை கோழிக்குஞ்சு சேடிவகைகள், அரைவிலையில் பெறலாம். பார்சல் செலவு இலவசம். விலைப் பட்டியலைப் பெற உங்கள் முகவரி உடைய முத்திரை ஒட்டிய கவரை அனுப்புக.

விபரங்கட்கு:-

அதிபர்:
சிறந்த விதைகள் விநியோகம்
சின்னக்கடை,
456 மன்னூர்.

கோண்டாவில, தங்கள் பூரணி மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் எஸ் கந்தசாமி, கே சிதிகாந்தன், ரி லோகராசா, வி தியாகராசா, கே யோகநாதன் ஆர் அன்னலட்சுமி, என் ககேஸ்வரி, கே நாகம்மா ஆகியோர் இவ்வருட சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
**Steve Reeves**
**In**
**SANDOKN THE GREAT**
**(Techniscope - Technicolour)**
**FILM SHOT IN CEYLON**

# சிவப்பிரகாச வித்தியாசாலை முதலிடம் பெற்றது

சுழிபுரம், ஞா விறு வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. தம்பு தலைமையில் நடைபெற்றது. இப் போட்டியில் பன்னிரண்டு பாடசாலைகள் கலந்துகொண்டன சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை 108 1/3 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை 83 1/3 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் அராலி சரஸ்வதி வித்தியாசாலை 52 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அதிபர் திரு வி தம்பு பரிசுகள் வழங்கினார்.

**போட்டி முடிவுகள்**

4 X 400 மீட்டர் அஞ்சலோட்டம் (ஆண்) பண்ணாகம் மெய்கண்டான், அராலி மேற்கு வள்ளியம்மை.

4 X 200 மீட்டர் அஞ்சல் (ஆண்) மத்தியபிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், சங்கானை சிவப்பிரகாசா, அராலி மேற்கு வள்ளியம்மை.

4 X 200 மீட்டர் அஞ்சல் (பெண்) மேற்பிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, தொல்புரம் விக்கினேஸ்வரா, பண்ணாகம் மெய்கண்டான்.

உயரம் பாய்தல் (ஆண்) கீழ்ப்பிரிவு: அராலி சரஸ்வதி, அராலி சரஸ்வதி, சங்கானை சிவப்பிரகாசா.

800 மீட்டர் ஓட்டம் (ஆண்) மேற்பிரிவு: அராலி மேற்கு வள்ளியம்மை, அராலி மேற்கு வள்ளியம்மை, பண்ணாகம் மெய்கண்டான்.

உயரம் பாய்தல் (ஆண்) மத்தியபிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை, சங்கானை சிவப்பிரகாசா.

400 மீட்டர் ஓட்டம் (ஆண்) மேற்பிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், சங்கானை சிவப்பிரகாசா, அராலி மேற்கு வள்ளியம்மை.

உயரம் பாய்தல் (ஆண்) மேற்பிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், சங்கானை சிவப்பிரகாசா, அராலி மேற்கு வள்ளியம்மை.

110 மீட்டர் ஓட்டம் (ஆண்) கீழ்ப்பிரிவு: வட்டு. திருஞானசம்பந்தர், சுழிபுரம் ஐக்கிய சங்கம், வட்டு. திருஞானசம்பந்தர்.

200 மீட்டர் ஓட்டம் (பெண்) மேற்பிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, பண்ணாகம் மெய்கண்டான், பண்ணாகம் மெய்கண்டான்.

200 மீட்டர் ஓட்டம் (ஆண்) மத்தியபிரிவு: அராலி சரஸ்வதி, தொல்புரம் விக்கினேஸ்வரா, சங்கானை சிவப்பிரகாசா.

200 மீட்டர் ஓட்டம் (ஆண்) மேற்பிரிவு: அராலி சரஸ்வதி, சங்கானை சிவப்பிரகாசா, அராலி மேற்கு வள்ளியம்மை.

நீளப்பாய்தல் (ஆண்) மத்தியபிரிவு: அராலி சரஸ்வதி, சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை, அராலி வள்ளியம்மை.

1500 மீட்டர் ஓட்டம் (ஆண்) மேற்பிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், பண்ணாகம் மெய்கண்டான், அராலி வள்ளியம்மை.

நீளப்பாய்தல் (ஆண்) மேற்பிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், பண்ணாகம் மெய்கண்டான், சங்கானை சிவப்பிரகாசா.

4 X 100 மீட்டர் அஞ்சல் ஓட்டம் (பெண்) கீழ்ப்பிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, அராலி வள்ளியம்மை, பண்ணாகம் மெய்கண்டான்.

4 X 100 மீட்டர் அஞ்சல் ஓட்டம் (பெண்) மத்தியபிரிவு: பண்ணாகம் மெய்கண்டான், சங்கானை சிவப்பிரகாசா, காரைநகர் மகளிர்.

4 X 100 மீட்டர் அஞ்சல் ஓட்டம் (பெண்) மேற்பிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, பண்ணாகம் மெய்கண்டான், தொல்புரம் விக்கினேஸ்வரா.

4 X 100 மீட்டர் அஞ்சல் (ஆண்) கீழ்ப்பிரிவு: சங்கானை சிவப்பிரகாசா, அராலி சரஸ்வதி, வட்டு. திருஞானசம்பந்தர்

4 X 100 மீட்டர் அஞ்சல் (ஆண்) மத்தியபிரிவு: அராலி சரஸ்வதி, சங்கானை சிவப்பிரகாசா, பண்ணாகம் மெய்கண்டான்.

4 X 1000 மீட்டர் அஞ்சல் (ஆண்) மேற்பிரிவு: சிவப்பிரகாசா, அராலி வள்ளியம்மை.

## பிறந்த நாள் பரிசு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)


இதைக்கொண்டு போய் உம் மனைவி மேசையில்வைத்து உடைத்துப்பாரும் என்று சொல்லி ஒரு பார்சலைக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார்.

உள்ளே என்ன இருக்கும் என்ற கேள்விக்குறியோடு உதவியாசிரியர் பார்சல் உறையை மளமளவென்று கிழித்தார். உள்ளே! ஓர் அழகான திருக்குறள் கிடந்தது. அந் நூலின் முதற்பக்கத்தில் எமது பிறந்தநாள் அன்பளிப்பு அதனுடன் ஒரு குறிப்பு: பெருமையென்பது பட்டங்களைப் பெற்றுவிட்டு எவரையும் மதிக்காமல் உலாவுவதால் வருவதல்ல. பெரியவர்க்கும் சிறியவர்க்கும் ஓரே மதிப்பளித்து பேரன்போடு எல்லாரோடும் பழகி கடமைகளைச் சரிவரச் செய்தால் பட்டமில்லாதவர்கூட அதனைப்பெறலாம் என்ற வாசகங்கள் இருந்தன.

பத்திராதிபர் கொடுத்த அந்தப் பரிசு எக்காலமும் இறவாத உதவியாசிரியரை புதுமனிதனாக ஆக்கியது.

**இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!**

| | | |
|---|---|---|
| [illegible]ஸ்வி ([illegible]) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மொடேர்ன் (பதுளை) |
| விஜிதா (ஹட்டன்) | தீவொளி (நுவரேலியா) | கல்யாணி (சாவலப்பிட்டி) |
| லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னூர்) | |



**எம்.ஜி.ஆர்.—சரோஜாதேவி**
மற்றும்பலர் நடிக்கும்
# நீதிக்குப்பின் பாசம்

# வரி விளம்பரம்

**தேவை**

ஸ்ரோர் கீப்பர் (Store Keeper) ஒருவர் உடனே தேவை. நம்பிக்கையும் நற்சான்றுமுள்ளவராக இருத்தல் வேண்டும். பிணைப்பணம் ரூபா 3000/- ரொக்கம் செலுத்தக் கூடியவருக்கு மாதச்சம்பளம் ரூபா 175/- கொடுக்கப்படும் 12-8-65 க்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 756, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 756

சிறு தொழில் செய்வதற்கு பெண்களும் ஒரு பெண் குமாஸ்தாவும் வான் விற்பனையாளர் ஒருவரும் தேவை. 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும் சங்கர கொமிக்கல் இன்டஸ்றீஸ், கண் வீதி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி. 756

மன்னூரிலிருந்து நாட்டுப்புறக் கடைகளுக்கு எமது பொருட்களை விற்பனைசெய்ய அநுபவம் உள்ள விற்பனையாளர்கள் தேவை. சேருவதற்கான தகைமைகளின் விபரப்பட்டியலைப் பெற ஒரு ரூபா மணிஓடர் அனுப்பவும் போக்குவரத்துச் செலவும் கொமிஷனும் மாதம் 80 ரூபாவும் கொடுக்கப்படும். முடிவு 22-8-65 விபரங்கட்கு: அதிபர், சிறந்தவிதைகள் விநியோகம், சின்னக்கடை, மன்னூர். 707

திறமையுள்ள சேல்ஸ் (பேய்ஸ்), சாவகச்சேரி, பருத்தித்துறை ஊர்காவற்றுறை அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் டீ' ஸ்டோர்ஸ், டாட்டன் சென்றல் சேவிஸ் ஸ்ரேசா. (பின்), சுன்னாகம். 763

**விற்பனைக்கு**

சுத்தமான ஜே. சி, சுத்தமான ஐசார், மற்றும் கலப்புள்ள இளங்கன்று பால் மாடுகள் நான்கு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:ப சி.அ. பொன்னுத்துரை. இல: 80 நாச்சிமார் கோயில் ரோட், யாழ்ப்பாணம். 761

8 ஒஸ் பவர (H P) புதிய மோட்டார் ஒன்று, 8 ஒஸ் பவர் (H P) பாவித்த மோட்டார் ஒன்று; 2 ஒஸ் பவர் (H P) பாவித்த மோட்டார் ஒன்று; 1 ஒஸ் பவர் (H P) மோட்டார் உடன் 1 2/1 இஞ்சி பம் பூட்டப்பட்டது. சுன்னாகம் ஒடு விற்பனை செய்யும் கடையில் இருக்கிறது. 760

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் நச்சிமார் கோயில் ரோட்டில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு ப. சி. அ. பொன்னுத்துரை, இல: 80, நாச்சிமார் கோயில் ரோட், யாழ்ப்பாணம். 762


**கல்வி**

ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தக வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தங்க இடவசதி உண்டு யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி. கரவெட்டி / 107, பருத்தித் துறை வீதி, கல்லூர், யாழ்ப்பாணம். 736

சில காட்களுக்குள் பி. ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதிக்காமல் பதிவு செய்துகொள்ளுங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, கல்லூர். யாழ்ப்பாணம். 787

தொய்வு, கசம், நீரிழிவு, வெண்ணை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயர்ந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்

# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வளர்ந்து புதிய ரதங்களை விரைவில் உருவாக்க அடியார்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

**பணம் அனுப்பும் விலாசம:-**

தனாதிகாரி, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை. வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 குழந்தைகளின் தந்தை தற்கொலை

## கொக்குவிலில் பரிதாப சம்பவம்

கொக்குவில் திங்கள்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த 45 வயதான சி சபாரத்தினம் என்ற புகையிலை வர்த்தகர், நச்சுத் திராவகம் அருந்தியது காரணமாக இன்று பகல் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

19 வயது முதல் 6 மாதம் வரையான 5 ஆண் குழந்தைகளுக்கும், 5 பெண் குழந்தைகளுக்கும் தந்தையான இவரது மரண விசாரணையில் சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் மனைவி பூபதி (36 வயது) பின்வருமாறு கூறினர்.

"எனது கணவர் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். கடைசிநேரத்தில் பணக் கஷ்டம் காரணமாக கவலையுற்றிருந்தார். இன்று ஒருவருக்கு புகையிலை வாங்கியதற்காக ரூபா 650 கொடுக்கவேண்டியிருந்தது. பிற்பகல் 2 மணிக்கு பணத்தைப் பெற்றுக்கொள்ள வருவதாக அவர் கூறியிருந்தார். எனவே இப்பணத்தை எப்படியாவது தேடித் தரும்படி என் கணவர் என்னிடம் கூறினர். என்னுல் அப்படிச்செய்ய வழியில்லையென்றும் அவர் வந்தால் மறுநாள் நாளைக்கு வரும்படி ஒழுங்கு செய்வதாகவும் கணவரிடம் கூறினேன். பின் என் கணவர் வெளியேபோய் பகல் 12-30 க்கு திரும்பிவந்தார் நான் அப்போது சமையல்செய்துகொண்டிருந்தேன். குழந்தைகள் வெளியே விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அறையிலிருந்து சத்தம் கேட்டது. அங்குசென்று நான் பார்த்தபோது என் கணவர் நச்சுத்திராவகப்போத்தல் ஒன்றை எறிந்துவிட்டு ஓடினர். அவரைப்பிடிக்க முயன்றேன். அப்போது தனக்கு எதுவும் குடிக்கக் கொடுக்கவேண்டாம் என்றுகூறிவிட்டு சில நிமிஷத்தில் கீழே விழுந்தார். உடன் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்ருேம் அங்கு அவர் மரணமானர்".

டாக்டர் செல்வி கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலஞ்சென்றவர் நச்சுத்திராவகம் அருந்தியதாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அதற்கான அடையாளங்கள் அவரிடம் காணப்பட்டன. வாட்டில் அனுமதிக்கப்பட்டபின் அவர் மரணமானர்".

பிரேதப பரிசோதனை நடத்திய திரு. அமிர்தலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## வலைப்பந்தாட்டப் போட்டி

குரும்பசிட்டி, திங்கள்

உடுவில் மகளிர்பாடசாலை மேற்பிரிவு வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாண திருக்கன்னியர் பாடசாலை மேற்பிரிவு வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் 17—10 கோல்களால் யாழ் திருக்கன்னியர் பாடசாலை வெற்றியீட்டி சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வடமாகாண பாடசாலைகளின் விளையாட்டுச்சங்க ஆதரவில் நடைபெற்றுவந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மேற்படி சாம்பியன் ஆட்டம் வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

இரு கல்லூரிக் கோஷ்டிகளின் கீழ்ப்பிரிவு வலைப்பந்தாட்டப்போட்டியில் உடுவில் மகளிர்கல்லூரி வெருகறுப்பாக பலமாக விளையாடி 10-8 கோல்களினுல் எதிர்க்கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்

## வவுனியா மன்னார் மாவட்ட போட்டிகள்

வவுனியா திங்கள்

வவுனியா மன்னார்மாவட்டங்களின் கரபந்தாட்டம் வலைப்பந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில்வவுனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் வவுனியா—மன்னார் மாவட்ட கல்விஅதிபர் திரு ஞானசேகரம் தலைமையில் நடைபெற்றது. இதில் வவுனியா-மன்னார் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் பங்குபற்றின.

இப்போட்டிகளை வவுனியா மன்னார் மாவட்ட உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு வே தங்கராசா ஒழுங்குசெய்திருந்தார்

### போட்டி முடிவுகள்

கரபந்தாட்டப் போட்டியில் கீழ்ப்பிரிவும், மேற்பிரிவும், எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயத்துக்குக் கிடைத்தது

வலைப்பந்தாட்டப் போட்டியில் கீழ்ப்பிரிவில் வவுனியா காமினி வித்தியாலயம் முதல் இடத்தைப் பெற்றது

மேற்பிரிவில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவிகள் வெற்றிபெற்றனர் இப்போட்டியும் விறுவிறுப்பாக நடைபெற்றது

## பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில் தேர் உற்சவம் நாளை புதன்கிழமை காலை நடைபெறும். விநாயகப் பெருமான் புதிய சித்திர ரதத்தில் ஆரோகணித்து வீதிவலம் வருவார் நாளை மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## புதுவருட நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவைச் சேர்ந்த நாரதீவு சனசமூகநிலயத்தின் வருடாந்தக் கூட்டம் திரு க பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு பி சபாரத்தினம், உபதலைவர்: திரு இ சுந்தரராசா, கௌரவ காரியதரிசி: திரு கே சோமஸ்கந்தன், தனாதிகாரி: திரு என் பாலசிங்கம் நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 10-8-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 கீதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-10 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 பட்டிப்பாடல்கள்.

இரவு 6-15 கிராமாஞ்சிலை, 6-45 பூனெஸ்கோ உரைச்சித்திரம், 7-00 நிலைய ஒலிப்பதிவுகள், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

---

இடைவேளையின்போது 6—5 கோல்களினுல் உடுவில் கோஷ்டி முன்னணியில் திகழ்ந்தனர் கீழ்ப்பிரிவு சாம்பியனாக உடுவில் மகளிர்கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## லொறி-கார் விபத்து

யாழ்ப்பாணம், செவ்

காரைநகர் சாணுயமூலையிலிருந்து தண்ணீர் ஏற்றுவதற்காக கன்னுகம நோக்கிசென்றுகொண்டிருந்த லொறியொன்று யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் ஒன்றுடன்மோதி விபத்துக்குள்ளானது

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் அமைக்கப்படவிருக்கும் கோபுரத்திற்கு நிலமெடுப்பதற்காக என்ஜினியர் வைத்திலிங்கம், தலைமைஆசிரியர் செல்லக்கண்ணு, திருவாளர்கள் எஸ ஆர் செல்லத்துரை, சுப்பிரமணியம் ஆகியோர் சென்றுகொண்டிருந்த காரே விபத்துக்குள்ளானது.

திருவாளர்கள் எஸ ஆர் செல்லத்துரை, சுப்பிரமணியம் ஆகியோர் காயங்களுக்குள்ளானர்கள் இவர்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

ஞாயிற்றுக்கிழமை காலை பொன்னாலை பாலத்தில் நடந்த இவ்விபத்தால் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் பஸ் சேவை தடைப்பட்டது

## "நாடகக் கலைக்கு பாடுபடுகிறர்"

நல்லூர், செவ்வாய்

"தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம சென்று நாடகத்தின் பெருமைகளை எடுத்துக் கூறி நாடகக் கலையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் கலாநிதி க. வித்தியானந்தனின் பணி பாராட்டுதற்குரியது" என்று மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத் தலைவரும் மாவை ஆதீன பிரதம குருவுமான சிவஸ்ரீ க து ஷண்முகநாதக் குருக்கள் நெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற 'சம்பூர்ண அரிச்சந்திரா' நாடக விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

மாவிட்டபுரம் காமாட்சி அம்மன் கோவில் கட்டிட நிதிக்காக மாதனை கலாமன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்திற்கு கல்லூரி அதிபர் திரு கே கிருஷ்ணபிள்ளை தலைமைவகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

இதுவரை காலமும் இக்கல்லூரியில் ஓர் சைவக் கோவிலுக்கான நிகழ்ச்சிகள் நடத்தப்படாமல் இருந்து வந்த குறை தற்போது நீக்கப்பட்டுள்ளது சமய அடிப்படையிலுள்ள நாடகத்தை சமயத்தின் காவலர்கள் ஆரம்பித்து வைப்பது பொருத்தமானது

சிவஸ்ரீ க. து ஷண்முகநாதக் குருக்கள் தொடர்ந்து பேசியதாவது:-

கவிஞர் காளிதாசன் நாடகத்தை ஆரம்பித்து வைக்க தஞ்சை மகாராஜா இராஜராஜேஸ்வரன் நாடகத்திற்கான இலக்கண வரம்புகளை ஏற்படுத்தி நாடகம் ஆடுபவர்களை சாக்கையர்கள் என்றும், 'நிருத்த யோகம்' என்றும் விருதுகளை வழங்கியும் வளர்த்தனர் நாடகம் ஓர் தெய்வீகக் கலையாக இருப்பதனுல் கோவில்களில் ஆசீர்வாதத்தில் நாடகத்திற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது

மற்றும் பலரும் பேசினர்

## பனிதசஞ்சாரமற்ற ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது. பாலைதீவில் மனித நடமாட்டம் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் யாவும் சப்-கலெக்டர் திரு எம் வீரசுந்தரம் முன்னிலையில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டன. விசாரணை முடிந்த பின்னர் திரு எம் வீரசுந்தரம் பொருட்களை அரசாங்க அதிபர் திரு என் ஜெயவீரா முன்னிலையில் சமர்ப்பித்தார் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எல்லாவற்றையும் பதிவுதல்செய்யும்படி அரசாங்க அதிபர் உத்தரவிட்டார்.

கரைச்சி கிராமசபையை

## பட்டினசபையாக்குவதற்கு ஆட்சேபம்

கிளிநொச்சி, திங்கள்

கரைச்சிக் கிராமசபையின் விசேஷ கூட்டத்தில் கரைச்சிக் கிராமசபையை பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தும் தீர்மானத்தையொட்டி நீண்டவிவாதம் நடைபெற்றது. மேற்படி தீர்மானம் பற்றி சபையில் சமூகமாய் இருந்த அங்கத்தவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்தனர். இக்கூட்டத்துக்கு பார்வையாளராக நாற்பதுக்கும் முப்பதுக்கும் உட்பட்ட பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனல் அவர்களின் அபிப்பிராயங்களை தெரிவிக்க சட்டரீதியில் அனுமதிக்கப்படவில்லை.

மேற்படி கூட்டத்திற்கு சபைத்தலைவர் திரு. வி ஆனந்தசங்கரி தலைமைவகித்தார். பட்டினசபையாக்குவதை எதிர்க்கும் பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டு சாதகமாக 14 வாக்குகளும் பாதகமாக ஒரு வாக்கும் பெற்று தீர்மானம் நிறைவேறியது.

பின்வரும் தீர்மானங்களை கொண்ட மகஜரை ஸ்தலதாபன அமைச்சரிடம் சமர்ப்பிப்பதெனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது:

கரைச்சிக் கிராமசபையின் ஓர் பகுதியைப் பட்டினசபையாக்கவேண்டுமென கொண்டுவந்த ஓர் பிரேரணை 19 அங்கத்தவர் கொண்ட இச்சபையில் அனுமதிப்போர் இன்றி அண்மையில் நிராகரிக்கப்பட்டதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

ஆகவே தாங்கள் இவ்விஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்காது சமன் செய்து சீர்தூக்கிப் பார்த்து ஒரு நல்ல முடிவிற்கு வருவீர்களென இச்சபை நம்புகிறது. பட்டின சபை அபைப்பைக் கைவிடுவதன் மூலம் இப்பகுதி மக்களுக்கும் பேருதவி செய்தவர்களாவீர்கள் என்பதையும் இச்சபை வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

இறுதியாக கரைச்சிக் கிராமசபையின் ஒரு தூதுகோஷ்டி தங்களைப் பேட்டிகண்டு நேரில் உத்தேசப் பட்டினசபையால் விளையக்கூடிய கேடுகளை மேலும் எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கும்படியும் தங்களைப் பேட்டி காண்பதற்கேற்ற நேரம், இடம், காலம் ஆகியவற்றை அறிவித்துதவும்படியும் இச்சபை வேண்டிக் கொள்ளுகிறது.

## ஆண்டுவிழா

குரும்பசிட்டி, திங்கள்

கோப்பாய்அரசினர் மகளிர் ஆசிரியகலாசாலை பழையமாணவர்சங்க ஆண்டுவிழாக் கொண்டாட்டங்கள் இம்மாதம் 18-ம் திகதி நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது வருடாந்தவிழாவுடன் கனிவாட்டவிழா நடாத்துவதென்றும் "கலைமலர்" பத்திரிகை வெளியிடுவதெனவும் நிர்வாகசபையினர் முடிவுசெய்துள்ளனர்

## மாவிட்டபுரத்தில் அருணகிரிநாதர் விழா

நல்லூர், செவ்வாய்

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தினர் வருடந்தோறும் நடாத்தும் அருணகிரிநாதர்விழாவும் இசைவிழாவும் வருகிற ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று தினங்கள் நடைபெறவிருக்கிறது.

இன்னிசைக்கச்சேரிகள், வில்லுப்பாட்டு, நாடகம், உபந்நியாசங்கள் என்பன விழாவில் இடம்பெறவிருக்கின்றன.

# உஷார்!

## கோவிலுக்கு காரில் செல்வோர்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு காரில் செல்லுபவர்களில் நீங்களும் ஒருவரா? அப்படியானல் மிகவும் உஷாராக இருக்கவேண்டும்.

ஏனெனில் பெருமா கோயிலுக்கு காரில் சென்று நீங்கள் காரை நிறுத்திவிட்டு ஆலயத்திற்குச் சென்றதும், கார்சில்லுகளுக்கு ஆணிகள் ஏற்றுவதிலும், இலகுவாக கழற்றக்கூடிய உதிரிப் பாகங்களை களவாடுவதிலும் ஒரு கோஷ்டி ஈடுபட்டுவருவதாக ஆலயத்திலுள்ள லைதலப் பொலிஸார் எச்சரிக்கைசெய்கிருர்கள்.

## மாலைதீவு பிரதிநிதியை சந்திப்பார்

உடுப்பிட்டி, ஞாயிறு

இலங்கையிலுள்ள படித்த வாலிபர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கும முயற்சியில் சுதந்திர மாலைதீவு அரசாங்கத்துடன் அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சியைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள மாலைதீவு பிரதிநிதி இ மாதம் 16-ந் திகதி தம்மை வந்து சந்திக்கும்படி அகில இலங்கை வேலைவேண்டுவோர் கழகத் தலைவர் திரு கே சி இராசசிங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இம்மாதம் 16-ந் திகதி கொழும்பிலுள்ள மாலைதீவுப் பிரதிநிதியைச் சந்திப்பதற்கு திரு கே சி இராசசிங்கம் தலைமையில் பேட்டிக்குழு வொன்று செல்லவிருக்கிறது

## மீனவர் கஷ்டம்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிக் கரையோரங்களில் கரவலைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தமது நாளாந்த வாழ்க்கைக்கே உழைக்கமுடியாத அளவுக்கு தொழிலில் மந்தநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆழ்கடலில வலைகள் வேலிகள் போல் இரவில் விரிக்கப்படுவதாலும யந்திரப்படகுகளின் நடமாட்டத்தாலும் மீன்கள் கரையோரப் பிரதேசத்திற்கு வருவது பெருமளவில் தடைப்படுவதே தமது தொழிலுக்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை நீடிக்குமானல் இப்பகுதியில்கரவலைத்தொழில் கைவிடப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## கட்சிக் கிளை

பருத்தித்துறை திங்

அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளையொன்று தும்பளையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது, நெல்லண்டை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: திரு கே இராமலிங்கம், உபதலைவர்கள்: திரு எஸ. எம் கந்தசாமி, திரு கே முருகேசு காரியதரிசி: வி பரமகுரு, உபகாரியதரிசி: சி சிவநாதன்.

கூட்டத்திற்கு திரு கே இராமநாதன் தலைமைவகித்தார்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org